12TH STD    அரையாண்டுத் தேர்வு - 2022 ( மாதிரி )

# வணிகவியல்

நேரம் : 3.00 மணி    மதிப்பெண் : 90

## பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.    $20 \times 1 = 20$

1 வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை --------- என்பர்
அ) ஒழுங்கு ஆ) பயன்பாடு இ) வேலைப்பகிர்வு ஈ) சமத்துவம்

2. பின்வருவனவற்றுள் எது மேலாண்மையின் மு கிய பணிகள் அல்ல?
அ) முடிவெடுத்தல் ஆ) திட்டமிடுதல் இ) ஒழுங்கமைத்தல் ஈ) பணியமர்த்துதல்

3. முதல்நிலைச் சந்தை என்பது பத்திரங்களை/ பிணையங்களை --------- முறை வியாபாரம் செய்யும் ஒரு சந்தை ஆகும்.
அ) முதன் முறை ஆ) இரண்டாம் முறை இ) மூன்றாம் முறை ஈ) பலமுறை

4. நாட்டில் ----- ------ பங்குச் சந்தைகள் உள்ளன.
அ) 2 ஆ 24 இ) 20 ஈ) 25

5 --- ---- ஊக வணிகர் முன்னெச்சரிக்கை உடையவர்
அ) காளை ஆ) கரடி இ) கலைமான் ஈ) முடவாத்து

6. ____________ என்பது இயக்குநர்கள் மற்றும் தோற்றுவிப்பாளர்களால் இரகசிய தகவல்களைப் பயன்படுத்தி செய்யும் பங்கு பரிவர்த்தனையைக் குற க்கும்
அ) உள்வழி வர்த்தகம் ஆ) சூதாட்டம்
இ) ஊக வணிகம் ஈ) முதலிடுதல்

7. மனித வளம் என்பது ஒரு ---------------- சொத்து.
அ) கண்ணுக்கு புலனாகும் ஆ) கண்ணுக்கு புலனாகா இ) நிலையான ஈ) நடப்பு

8. விளம்பரம் என்பது ஒரு – ---- --- ஆட்சேர்ப்பு வளமாகும்.
அ) அக வளங்கள் ஆ) புறவளங்கள் இ) முகவர் ஈ) புறத்திறனீட்டல்சரியானதை

9. பொருத்தமற்ற விண்ணப்பதாரரை நீக்குவதற்கான செயல்முறை ------------ என அழைக்கப்படுகிறது
அ) தேர்வு ஆ) ஆட்சேர்ப்பு இ) நேர்காணல் ஈ) தூண்டு ல்

10. கீழ்கண்டவற்றுள் எது பங்குகள் மற்றும் பத்திரங்களை வாங்கி, விற்கும் நடவடிக்கையை மேற்கொள்கிறது?
அ) பங்கு சந்தை ஆ) தயாரிப்பு பொருள் சந்தை இ) உள்ளூர் சந்தை ஈ) குடும்ப ந்தை

11. சந்தையிடுகை முறையின் ஆரம்ப நிலை -----------------
அ) முற்றுரிமை முறை ஆ) பணத்திற்கு மாற்றுதல்
இ) பண்டமாற்று முறை ஈ) தற்சார்பு உற்பத்தி

B.BALAJI, GHSS, PARAN HU , KANCHIPURAM DT. 9629647613

12. நுகர்வோர் இயக்கத்தின தந்தை யார்?
அ) மகாத்மா காந்தி ஆ) ஜான் எப். கென்னடி இ) ரால்ப் நேடர் ஈ) ஜவஹர்லால் நேரு

13. நவீன சந்தையியலின் இறுதியான நோக்கம் -----------------
அ) அதிகமான இலாபம் ஆ) குறைவான இலாபம்
இ) நுகர்வோர் திருப்தி ஈ) சமுதாயத்திற்கு சேவை

14. -------------- புதிய தொழிற்துறைக் ெ ாள்கைய ன் விளைவாகும், இதனால் உரிமம் முறை அகற்றப்பட்டது
அ) உலகமயமாக்கல் ஆ) தனியார்மயமாக்கல்
இ) தாராளமயமாக்கல் ஈ) இவற்றில் எதுவுமே இல்லை

15. சரக்கு விற்பனை ஒ ந்தத்த ற்கு எது முக்கிய உறுப்பாக இருக்கிறது?
அ) இருதரப்பினர் ஆ) சொத்துரிமை மாற்றம் இ) விலை ஈ) அனைத்தும்

16. மாற்றுமுறை ஆவணச் சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?
அ) 1981 ஆ 1881 இ) 1994 ஈ) 1818

17. தொழில் முனைவோரை கீழ் குறிப்பிட்டபடி எப்படி வகைப்படுத்த முடியாது?
அ) இடர்தாங் ி ஆ) புதுமைபடைப்பவர் இ) ஊழியர் ஈ) அமைப்பாளர்

18. ------- திட்ட அறிக்கையில் துண க ம் செய்வதற்கான பொறிமுறையை உள்ளடக்கியது
அ) வங்கி ர் ஆ) அரசு
இ) கடன் அளிக்கும் நிறுவனங்கள் ஈ) தொழில் முனைவோர்

19 ஒரு தனியார் நிறுமம் குறைந்தது ------------ இயக்குனர்கள் இருக்க வேண்டும்
அ) ஏழு ஆ) ஐந்து இ) மூன்று ஈ) இரண்டு

20. ---------------- கூட்டம் நிறுமத்தின் வாழ்நாளில் ஒரு முறைமட்டுமே கூட்டப்படும்
அ) சட்டமுறை ஆ) ஆண்டுப் பொது இ) சிறப்பு ஈ) வகுப்பு

## பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும் அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.    $7 \times 2 = 14$

21. அதிகாரம் என்பதன் பொருள் தருக.

22. இரண்டாம் நிலைச் சந்தையில் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?

23. அரசுப் பத்திரங்கள் சந்தை என்றால் என்ன?

24. தரகர் என்று யாரை அழைக்கப்படுகிறார்கள்?

25. மனித வள மேலாண்மையின் இயல்புகளில் ஏதேனும் இரண்டு கூறுக.

26. டிஜிட்டல் இந்தியாவைப் பற்றி குறிப்பு வரைக

27. நிகழ் சரக்கு / வருநிகழ்வுசார் சரக்கு என்றால் என்ன?

28. தனியார்மயமாக்கல் என்றால் என்ன?

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

29. "பகராள்" சிறு குறிப்பு வரைக.

30. வணிகர்கள், போதுமான அல்லது தேவைக்கு அதிகமான அளவு சரக்குகளை இருப்பு வைத்திருந்தாலும் கூட தங்கள் கடைகளின் முகப்பில் இருப்பு இல்லை எனும் பெயர்ப் பலகையை வைக்கின்றனர். இது எத்தகைய செயல்முறையாகும்? இதனால் நுகர்வோர் எவ்வாறு பாதிப்படைகின்றனர்?

## பகுதி - III

**குறிப்பு : எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21**

31. மேலாண்மை வரைவிலக்கணம் தருக.

32. நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு முக்கியத் தகவல்கள் எவ்வாறு தெரிவிக்கப்படும் ?

33. சட்டமுறைக் கூட்டம், ஆண்டு பொதுக்கூட்டம் தவிர நடத்தப்படும் பங்குநரின் கூட்டத்தின் பெயரைக் கூறி விளக்குக.

34. மூலதனச் சந்தையின் பல்வேறு வகைகள் என்ன? விளக்குக.

35. கருவூல இரசீதின் வகைகளை விவரி

36. கரடி ஊகவணிகர் குறிப்பு வரைக.

37 வேலைவாய்ப்பு இணையதளங்கள் என்றால் என்ன?

38. மின் சந்தையிடுதலின் நன்மைகளில் மூன்றினை எழுதுக.

39. சந்தையிடுகையின் நோக்கங்கள் யாவை?

40. எத்தகைய தொழில் முனைவோர்கள் எதையும் திதாக புகுத்துவதில் தயக்கம் காட்டுபவர்கள்? விளக்கம் தருக.

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 7 × 5 = 35**

41. அ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி.

( அல்லது )

ஆ நுகர்வோரின் பொறுப்புகள் யாவை? ( ஏதேனும் 5 )

42. அ) நிபந்தனை மற்றும் நம்புறுதிகளை வேறுபடுத்துக.

( அல்லது

ஆ) முதல் நிலைச்சந்தை மற்றும் இரண்டாம் நிலைச்சந்தைக்கும் இடையேயான வேறு ாடுகளை விளக்குக.



43. அ) மேலாண்மையின் பல்வேறு பணிகளை விளக்குக. ( ஏதேனும் 5 )

( அல்லது )

ஆ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள அகவளங்களை விளக்குக ( ஏதேனும் ஐந்து )

44. அ) நுகர்வோர் எவ்வாறு சுரண்ட படுகிறார்கள்? ( ஏதேனும் ஐந்து )

( அல்லது )

ஆ) இயக்குனரின் ல்வேறு வகைகளை சுருக்கமாக கூறு. ( ஏதேனும் ஐந்து )

45. அ) பணச்சந்தை மற்றும் மூலதனச்சந்தை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி.

( அல்லது )

ஆ) மனித வள மேலாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக. ( ஏதேனும் 5 )

46. அ) நவீன சந்தைய டுதலில் ஏதேனும் இரண்டினை விளக்குக

( அல்லது )

ஆ) ஏதேனும் ஐந்து அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தினை விளக்குக.

47 அ) மக ிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவாதிக்க.

( அல்லது )

ஆ) தாராளமயமாக்கல் நன்மைகள் பற்றி விளக்குக

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613